செய்தி வெளியீட்டு எண்–368 நாள்–01.05.2010

# மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கலந்துக் கொண்ட ஜப்பான் மற்றும் தமிழக தொழில்துறை கூட்டுக் கூட்டத்தில் "சென்னை–ஆசியான் நாடுகளின் நுழைவாயிலாக உள்ளது" என ஜப்பான் நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.மசாயூகி நாஷிமா புகழாரம்

* * * * * * * * * * *

இன்று (1.5.2010) சென்னை– ஹோட்டல் லீ ராயல் மெரிடினில் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் அலுவலகத்தை. ஜப்பான் நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.மசாயூகி நாஷிமா (H.E Masayuki Naoshima) தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:–

ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் அலுவலகத்தை, ஜப்பான் நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.மசாயூகி நாஷிமா அவர்கள் சென்னையில் இன்று திறந்து வைத்திருப்பதற்கு தமிழக அரசின் சார்பில் முதலில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று , ஜப்பான் அரசு இந்த அலுவலகத்தை சென்னையில் திறந்துவைத்ததற்கு எனது மகிழ்ச்சியை தெரிவித்து கொள்கிறேன். இதன் மூலம், ஜப்பான் மற்றும் தமிழகமிடையே தொழில் முதலீடுகளும், வர்த்தகமும் பெருகும். ஜப்பான் நாட்டை சேர்ந்த 840 நிறுவனங்கள், இந்தியாவிலே தங்கள் தொழிற்சாலைகளையும், அலுவலகங்களையும் நடத்திவருகின்றன. குறிப்பாக தமிழகத்தில் மட்டும் ஜப்பான் நாட்டை சேர்ந்த 170 நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு ஜப்பான் நாட்டு நிறுவனங்கள் மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றன. ஜப்பான், அமெரிக்கா, தென் கொரியா, பின்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிருந்து, தமிழகத்தில் பெரும் அளவில் தொழில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. ஜப்பான் நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் தமிழகத்தில் மேலும் முதலீடுகள் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு கொள்கிறேன்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கும் ஜப்பான் நாட்டு வங்கியின் நிதி உதவியை பெறுவதற்காக நான் 2008 ஆம் ஆண்டு டோக்கியோ சென்றதை இந்த நேரத்தில் நினைவில் கொள்கிறேன். ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் அலுவலகம் சென்னையில் திறக்கப்பட்டதின் மூலமாக நிச்சயமாக தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெருகும். சென்னை–பெங்களூரு, சென்னை–எண்ணூர் இடையே தொழில்பெருவழிச் சாலைகள் அமைத்தல், சென்னைக்கு அருகே பல்நோக்கு சரக்கு போக்குவரத்து பூங்கா (Multi

Logistic Park) அமைத்தல் மேலும், போக்குவரத்து, கல்வி, சுகாதார மேம்பாடு, சுற்றுலா, விவசாயத்துறை போன்ற துறைகளில் ஜப்பான் நாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை தமிழக அரசு ஆர்வத்துடன் வரவேற்கிறது. ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் சென்னை அலுவலகம் திறக்கப்பட்டதின் காரணமாக இருநாட்டிற்கான உறவுகள் மேலும் வலுப்பெறும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்" என மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஜப்பான் நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.மசாயூகி நாஷிமா பேசும் போதும், ஜப்பான் நாட்டை சேர்ந்த நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் முதலீடுகளை செய்வதற்கு முன்னுரிமை அளிக்குமாறும், மேம்படுத்தப்பட்ட தொழில் பூங்காக்களை தமிழகத்தில் அமைக்க வேண்டும் என்றும் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் சென்னை அலுவலகம் இருநாட்டிற்கான உறவுகளை மேம்படுத்த உதவும் என்றும், சென்னை–ஆசியான் நாடுகளின் நுழைவு வாயிலாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், முதலமைச்சரின் செயலாளர்(கண்காணிப்பு) திரு.டி.வி.சோமநாதன், தொழில்துறை செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன் மற்றும் நெடுஞ்சாலைத்துறை செயலாளர் திரு.ஜி.சந்தானம், டிட்கோ மேலாண்மை இயக்குநர் திரு. சுனில்பாலிவால், சிப்காட் மேலாண்மை இயக்குநர் திரு. என்.கோவிந்தன், துணை முதலமைச்சரின் செயலாளர் திரு. கே.தீனபந்து, ஜப்பான் நாட்டின் இந்திய தூதர் திரு. டோமிச்சி (Mr.Domichi), ஜப்பான் நாட்டின் துணைத் தூதர் திரு. கசோ மினாகாவா (Mr. Kazuo Minagawa), ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் தலைவர் திரு. மிச்சிடாக்கா நகடோமி (Mr. Michitaka Nakatomi) மற்றும் டோயோட்டோ மோட்டார்ஸ், தோஷிபா, நிசான், மிட்சுபிஷி, ஹிட்டாச்சி ஆகிய ஜப்பான் நாட்டு நிறுவனங்களின் நிர்வாகிகள், இந்திய தொழில் கூட்டமைப்பின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் துணை முதலமைச்சர் திரு.மு.கஸ்டாலின் அவர்கள் ஜப்பான் நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.மசாயூகி நாஷிமா அவர்களுக்கும் மற்றும் குழுவில் இடம் பெற்ற பிரதிநிதிகளுக்கும் நினைவு பரிசுகளை வழங்கினார்.

* * * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.